வீடியோ கமரா, T.V. வீடியோ டெக் ஆகியவற்றை உத்தரவாதத்துடன் உடனுக்குடன் திருத்திக் கொள்வதற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

உங்கள் இல்லங்களில் நிகழும் மங்கல நிகழ்வுகளின் நல்ல முறையில் வீடியோ படப்பிடிப்பிற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 11 புதன்கிழமை (27 07 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 241

# தமிழர்களுக்கு இதனிலும் விட கூடுதலாக தன்னாட்சி அதிகாரம் வழங்க முடியாது!

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 27
கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-3)

பருத்தித்துறைக்கு புறப்படவிருந்த

## றுகுணு கப்பல் கொழும்பில் திடீரென நிறுத்தப்பட்டது!

### யூரியா பொதிகள் கண்டுபிடிப்பு!!

யாழ்ப்பாணம், ஜூலை 27
கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கி நேற்று முன்தினம் புறப்பட ஆயத்தமான 'றுகுணு' கப்பலை —
கடற்படையினர் திடீரென தடுத்து தொடர்ந்து சோதனை செய்துவருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.
யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான உர வகைகள் மற்றும் நாளாந்த பொருள்கள் இக்கப்பலில் ஏற்றப்பட்டதாகவும் —
கப்பல் பருத்தித்துறை நோக்கி நேற்று முன்தினம் புறப்பட தயாரானதாகவும் —
அவ்வேளையில் —
கடற்படையினரின் திடீர் அறிவிப்பை அடுத்து அக்கப்பல் புறப்படுவது நிறுத்தப்பட்டதாகவும் —
கடற்படையினர் கொழும்பு துறைமுகத்தில் அக்கப்பலை தடுத்து வைத்து கடும் சோதனை செய்வதாகவும் — தெரிவிக்கப்பட்டது.
படையினரின் சோதனையின்போது அக்கப்பலில் இரண்டு பொதிகளில் யூரியா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (உ-3)

## வீடொன்றில் வெடித்த் கிரனேட்டுக்கு 2பேர் பலி!

### பொத்துவிலில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 27
பொத்துவில் பகுதியில் ஐ.தே.க வேட்பாளர் ஒருவரின் உறவினரின் வீட்டில் கிரனேட் குண்டு ஒன்று நேற்று வெடித்ததில் இருவர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
கிரனேட்டின் ஊசியை இளைஞர் ஒருவன் தவறுதலாக அகற்றியபோது, அக்கிரனேட்டைப் பறித்து தூர எறிய வேட்பாளரின் உறவினர் முயற்சித்தார் என்றும்—
அந்நிலையில் கிரனேட் வெடித்தது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்: இருவரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.
அந்த வீட்டில் கிரனேட் குண்டு எதற்காக வைக்கப்பட்டிருந்தது என்பது தெரிவிக்கப்படவில்லை. (உ-எ)

## தேர்தல் கால வன்செயலில் காயமுற்ற பிக்கு மரணம்

நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் காயமடைந்த மாதம்பை சுதுவெல்ல சமயாவர்த்தனாராமயாவைச் சேர்ந்த புத்தரகித்த நாயக்க தேரர் நேற்று மரணமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.
கொழும்பு பெரியாஸ்பத்திரியில், அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் இவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.
முன்னாள் எம். பி. திரு. எஸ். டி. ஆர். ஜயரத்னாவின் வாகனத்தில் பயணஞ் செய்து கொண்டிருந்தபோது இந்த பிக்கு கவிச்சுக்கு இலக்கானார் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

## டயர் போட்டு எரிக்க நாம் தயங்க மாட்டோம்!

### அமைச்சர் நந்தா மத்தியூ கூறுகிறார்

மக்களைப் பாதுகாப்பதற்காக அதிக எண்ணிக்கையில் டயர்களைப் பாவிக்க நாம் தயங்கப்போவதில்லை.
அமைச்சர் நந்தா மத்தியூ இவ்வாறு கூறினார்.
கொலன்னே தொகுதியில் ஜனாதிபதி விஜேதுங்க பங்குபற்றிய கூட்டத்தில் மேடை இடிந்து விழுந்த சம்பவத்துக்குப் பின்னர், அங்கு தொடர்ந்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
1980 களின் பிற்பகுதியில் தெல்விக்கையில் நடந்த வன்செயல்களை அடக்குவது என்ற போர்வையில் கைது செய்யப்பட்டவர்களை டயர்களை பயன்படுத்தி எரித்ததாக எம்மை எதிரணியினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.
ஆனால் அவர்களுக்கு நான் ஒன்றைக் கூறத் தயாராக இருக்கின்றேன் மக்களைப் பாதுகாக்க இன்னும் கூடுதலான டயர்களை போட்டு எரிப்பதற்கு நாம் தயங்க மாட்டோம் — என்றும் அவர் கூறினார். ஜனாதிபதி விஜேதுங்காவும் அப்போது அங்கு இருந்தார். (உ-எ)

## "மக்களின் குரல்" சேவை இடைநிறுத்தப்பட்டது

கடந்த மூன்றரை வருடகாலமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சேவையில் இடம்பெற்று வந்த "மக்களின் குரல்" ஒலிபரப்பு தேர்தல் முடியும் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இச்சேவையில் கொழும்பிலிருந்து இயங்கும் தமிழ்க் குழு ஒன்றுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யப்பட்டு வருவதாக கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வந்தது தெரிந்ததே.
அதனையடுத்தே இச்சேவை தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ)

## ஆளும் ஐ. தே. க. செயலாளர் உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 27
வடக்கிலும், கிழக்கிலும் வாழும் தமிழ் மக்களுக்கு, இப்போதுள்ளதை விட கூடுதல் தன்னாட்சி அதிகாரம் எதனையும் வழங்க முடியாது.
தமிழர்களுக்கு இனியும் கூடுதல் அதிகாரம் வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாரில்லை. அதற்கு ஒரு போதும் இணங்கவும் மாட்டாது.
இவ்வாறு அறிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா.
கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிட்ட பின்னர் அவர் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.
அந்த மாநாட்டிலேயே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.
இனப்பிரச்சினைக்கான தீர்வு நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட
(4ஆம் பக்கம் பார்க்க)

ஐ. தே. கவின் உத்தியோகபூர்வ தேர்தல் விஞ்ஞாபனம்:

## கிழக்கில் கருத்துக்கணிப்பு இன்றி வட-கிழக்கு இணைப்பு இல்லை

### நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடரும்

கொழும்பு, ஜூலை 27
"கிழக்கு மாகாணத்தில் கருத்துக்கணிப்பு நடத்தாமல் வடக்கு — கிழக்கு இணைப்பு இல்லை."
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி உத்தியோகபூர்வமாக நேற்று வெளியிட்ட அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கட்சியின் பொதுச்செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா விஞ்ஞாபனத்தை உத்தியோகபூர்வமாக வெளியிட்டார்.
இதுவரை கட்சியின் சார்பில் உத்தியோகப் பற்றற்ற முறையில் மூன்று தேர்தல் விஞ்ஞாபனங்கள் புழக்கத்தில் விடப்பட்டிருந்தன என்றும்—
அவ்விஞ்ஞாபனங்களில் உள்ள அம்சங்கள் ஒன்றிணைக்கப்பட்டு இறுதி கொள்கை விஞ்ஞாபனமாக வெளியிடப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.
ஜனாதிபதி விஜேதுங்க, பிரதமர் ரணில் விக்ரமசிங்க அமைச்சர்கள் ஹமீத், செசில் ஆபேசேகர விஞ்ஞாபனம் தயாரிக்கும் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.
(4 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கடமைகளில் ராணுவச் சிப்பாய்கள்

கொழும்பு, ஜூலை 27
தேர்தல் கடமைகளில் பொலிஸாருக்கு உதவியாக ஆயிரம் இராணுவச் சிப்பாய்களை ஈடுபடுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இச்சிப்பாய்களுக்கு தேர்தல் சட்டவிதிகள் மற்றும் தேர்தல் காலத்தில் அமைதி பேணுதல் ஆகியன பற்றி விசேட பயிற்சி வழங்கப் படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.
பொலிஸ் தலைமையகத்தில் தேர்தல் பணிகளுக்குப் பொறுப்பாக உள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில் இச்சிப்பாய்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் 'லங்காதீப'வுக்கு தெரிவித்தார். (உ-எ 6)

## யாழ். தேர்தலுக்கு எதிராக ஐ.நாவில் முறையிட முடிவு

### தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானம்

கொழும்பு, ஜூலை 27
யாழ். மாவட்டத்தில் பொதுத்தேர்தலை நடத்துவது என்ற தேர்தல் ஆணையாளரின் முடிவு குறித்து ஐ.நாவுக்கு முறையிடப்போவதாக தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவித்துள்ளது.
தேர்தல் ஆணையாளரின் முடிவை ஆட்சேபித்து தமிழர் விடுதலைக் கூட்டணி மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் ஆகியவற்றில் மேற்கொண்ட சட்ட நடவடிக்கைகள் தோல்வி கண்டதை அடுத்தே —
இது குறித்து ஐ.நாவிடம் முறையிடப் போவதாக தமிழர் விடுதலைக் கூட்டணி பயமுறுத்தி உள்ளதாக 'சண்டே ஐலண்ட்' வாரஇதழில் அதன் அரசியல் செய்தியாளர் சுமித்ரா தெரிவித்திருக்கிறார்.
எனினும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இந்த முயற்சி வெற்றி அளிக்காது என்று சில வட்டாரங்களில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.
இது போன்ற நிலைவரங்களில் ஐ. நாவின் செயல்பாடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பது தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டவல்லுநர்களுக்குத் தெரிந்த விஷயம் என்றும் 'சண்டே ஐலண்ட்' மேலும் தெரிவித்துள்ளது. (உ-எ)

## குடும்பத்துடன் சிறிசேன கூரே நாட்டை விட்டு வெளியேற்றம்

கொழும்பு, ஜூலை 27
அமைச்சர் சிறிசேன கூரே தமது மனைவி, இரு பிள்ளைகளுடன் நேற்று முன்தினம் நாட்டை விட்டு வெளியேறி விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.
கம்பஹா மாவட்ட முன்னாள் சுதந்திரக்கட்சி எம். பியான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கோன்காட்டி வெளியிட்ட செய்தி ... வெளியிட்டது.
இத்தகவலை உறுதிப்படுத்துவதற்காக அவரது அமைச்சுடன் தொடர்பு கொண்ட போது, அமைச்சர் கடந்த இரண்டு தினங்களாக அலுவலகத்துக்கு வரவில்லை என்று அங்கு இருந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
நாளை அமைச்சர் அலுவலகத்துக்கு வருவாரா என ... தெரிவித்தார்.
அமைச்சரின் வீட்டில் விசாரித்த போது, அமைச்சரும் அவரது குடும்பத்தினரும் வீட்டில் இல்லை என்றும் —
இம்மாதம் 30 ஆம் திகதி வரை அவர்கள் கொழும்பு திரும்பமாட்டார்கள் என்றும் வீட்டில் இருந்த ஒருவர் தெரிவித்தார்.
அமைச்சர் கூரே இதுவரை ... பிரசாரக் கூட்டம் எதிலும் பேசவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

எதிரணிக் கூட்டணி ஏகமனதாக முடிவு

## பொ.ஐ.மு. வென்றதும் சந்திரிகாவே பிரதமர்!

### டி. பிக்கும் உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 27
எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டும் பட்சத்தில் பிரதமர் பதவியை ஏற்கும்படி சந்திரிகா குமாரணதுங்காவையே அழைக்க வேண்டும் என்று ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி. எம். ஜயரத்னா நேற்று மாலை 5.20 மணியளவில் ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது:
சந்திரிகாவையே பிரதமர் பதவிக்கு நியமிப்பது என்று பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஒருமனதாக முடிவு செய்துள்ளதாகவும்—
எனவே அரசமைப்புக்கு ஏற்ப பிரதமராக சந்திரிகாவே நியமிக்கப்படுவார் என்று பெருநம்பிக்கையுடன் எதிர்பார்ப்பதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(4 ஆம் பக்கம் பார்க்க)

## குட்டையரை உயரமாக்க அபூர்வ சத்திரசிகிச்சை!

பீகிங் ஜூலை 27
குட்டையர்களை நெட்டையர்களாக்கும் அபூர்வ சத்திரசிகிச்சை ஒன்று சீனாவில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது;
1. 8 அடி உயரமான 15 வயது நிரம்பிய மியாஷியூ என்பவர் இச்சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். 14 வாரங்கள் கழித்து அவரின் உயரம் 130 செண்டிமீற்றராக அதிகரித்தது என்று தெரிவிக்கப்படுகிறது.
உலகிலேயே முதல் முறையாக மேற்கொள்ளப்பட்ட இச்சத்திரசிகிச்சையின் போது முளையில் உள்ள "பிற்றயிற்றறி" சுரப்பி புனரமைக்கப் பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-6)

போதைவஸ்து குற்றச்சாட்டு:

## இரண்டு தமிழருக்கு எதிராக மரணதண்டனைத் தீர்ப்பு

### கொழும்பு மேல்நீதிமன்றம் வழங்கியது

கொழும்பு, ஜூலை 27
மோர்பின் என்ற போதைவஸ்து வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட இரண்டு தமிழர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி ஷிராணி திலகவர்த்தன மரணதண்டனை விதித்துத் தீர்ப்பு அளித்தார்.
கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருவைச் சேர்ந்த சோமசுந்தரம் அல்லது லக்கிசெல்வராஜா, பெரியசாமி பாலகிருஷ்ணன் ஆகிய இருவருக்குமே மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது.
20-09-1986 இல் 260 கிராம் 'மோர்பின்' போதைப் பொருளை வைத்திருந்ததாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. [உ-எ-6]

## தனியார் பிரிவு மாணவருக்கு மருத்துவ பீடத்தில் அனுமதி

### யாழ் பல்கலை. மூதவை முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 27
தனியார் மருத்துவக் கல்லூரியான, வட - இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களான இந்த 43 பேரையும் யாழ். மருத்துவ பீடத்தில் பயில்வதற்கு அனுமதிப்பதென யாழ் பல்கலைக்கழக மூதவை நேற்று முடிவு செய்தது.
யாழ். பல்கலைக்கழக மூதவை நேற்றுக் கூடிய போது, சம்பந்தப்பட்ட மாணவர்கள் அனுமதி தொடர்பாக மருத்துவ பீடசபையின் தயாரித்த அறிக்கை பற்றி ஆராயப்பட்ட பின்னரே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டதாக அறியவருகிறது. (உ-3)

## நரோமா கப்பல் சேவை மாற்றம் குறித்து அறிவிப்பு

வாரஇறுதியில் நடைபெற இருக்கும் 'நரோமா' கப்பல் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது
திருகோணமலையில் இருந்து 29 ஆம் திகதி இரவு புறப்படும் இக்கப்பல் 30 ஆம் திகதி காலை காங்கேசன்துறையை அடைந்து அன்றே திருகோணமலை திரும்பும் என்றும் —
மறுநாள் 31 ஆம் திகதி திருகோணமலையில் இருந்து புறப்பட்டு முதலாம் திகதி காலை காங்கேசன்துறைக்கு வந்து அன்று மாலையே திருகோணமலைக்கு அது மீண்டும் திரும்பும் என்றும் —
பாதுகாப்பு அமைச்சு யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளது.
கப்பலில் வரும் பயணிகளை காங்கேசன்துறையில் இருந்து பருத்தித்துறைக்கு அழைத்துச் செல்வதற்கு இணைப்புக் கப்பல்சேவை இல்லாத பட்சத்தில் நேரடியாக இக்கப்பலை பருத்தித்துறைக்கு வர அனுமதி வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. (எ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சரசாலை கனகன்புளியடிச் சந்திக்கருகாமையில், சாவகச்சேரி றோட்டில் 12 பரப்புக் கொண்ட மா, தென்னை உள்ள வீடும் வளவும் விற்பனைக்குண்டு. விபரங்களில் தொடர்புகொள்ளவும். முகவரி: திருமதி சம்புலிங்கம், மே/பா இராமச்சந்திரன், இளைப்பாறிய ஆசிரியர், சரசாலை. (32081)

முட்டை இடும் பிரமா கோழிகள் இரண்டும் சில்க்கி ஆஞ், பிறவுன் சேவல்கள் இரண்டும் உடன் விற்பனைக்குண்டு. பிவான்ப் பரமேடலின் இல: 152/2, கோயில்வீதி, யாழ்ப்பாணம். (32090)

Prima கோழித்தீன், கால்நடை மருந்துகள் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் விடியோ சென்ரர், இல: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32093)

### ஆனந்தம் சீயாக்காய்

எமது உடம்புக்கு சிரசே பிரதானம். ஆகவே சித்தமருத்துவ முறைப்படி தயாரிக்கப் பெற்ற ஆனந்தம் சீயாக்காய் பவுடர் என்று கேட்டுவாங்கி பயன் பெறவும். [7486]

### மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேர்க்ஸ், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி, தலைமையகம் 284, வாணவில் அருகில் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (கி-8299)

### தேவை

மாணவர்கள் தங்கியிருந்து படிப்பதற்கு அறை தேவை. திருநெல்வேலியில் அமைந்த அண்மித்த பகுதியில் இருப்பது விரும்பத்தக்கது. கடித மூலம் தொடர்புகொள்ளவும். இல. 673, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (32083)

### கணக்கு இலிகிதர் தேவை

கணக்கியலைப் பாடமாகக் கொண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்தியவர்கள் விண்ணப்பிக்கலாம். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேல்வரும் முகவரிக்கு உடன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி. (7547)

## சேவை நலம் பாராட்டுவிழா

யாழ். மத்திய கல்லூரி உருவாக்கிய 3 ஆவது யாழ். மாவட்ட சாரண ஆணையாளராகிய திரு. சி. சுந்தமூர்த்தி சாரண சேவையில் 50 ஆண்டுகள் நிறைவு செய்ததை முன்னிட்டு யாழ். மத்திய கல்லூரி சாரணர் குழுவும் நலன் விரும்பிகளும், பழைய மாணவரும் இணைந்து நடத்தும் பொன்விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை தலைமையில் நடைபெறும் (உ)

## மாமுனையிலிருந்து புதிய பஸ்சேவை

வடமராட்சி கிழக்கு மாமுனையில் இருந்து யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களுக்கு புதிய பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி கிழக்கு சிற்றூர்தி சேவை சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

## பாரதியார் விழா

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவினர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் விழாவை கொண்டாட ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். (க-161)

## இலவச வைத்திய சேவை

வலி மேற்கு பிரதேச சபையினால் நடத்தப்படும் மக்கள் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலையின் சேவை வட்டுக்கோட்டை உப அலுவலகத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களிலும், அராலி உப அலுவலகத்தில் செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களிலும் காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 3-30 மணி வரை நடைபெறும். [க-161]

---

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி
பழைய மாணவர் மன்ற

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 11-09-94 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி

★ புதிதாக உறுப்பினர்கள் சேரவிரும்பின் கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று 20-08-94க்கு முன் இணைச் செயலாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

★ பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் உறுப்பினர்கள் 27-08-94இற்கு முன் இணைச்செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

சகல பழைய மாணவர்களையும், ஆசிரியர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

து. சந்தோஷம்(அதிபர்) தலைவர்
சி. சோ. ஜீவரட்ணம்
ச. ஜெகதீஸ்வரராசா
(இணைச் செயலாளர்கள்)

(7549)

---

## 31ஆம் நாள் நீங்காத நினைவும் நன்றி நவிலலும்



### செல்வி வசந்தி சண்முகநாதன்

மலர்வு: 1957 – 11 – 08
உதிர்வு: 1994 – 06 – 28

வீசிய வசந்தம் ஓய்ந்ததோ
விதி செய்த சதி இதுவோ
ஆற்றொணாத் துயரில் அமிழ்ந்ததே வாழ்வு
ஆறுமோ எம் துயர்? ஆறாது! ஆறாது!!

பெற்றோர்;
உடன் பிறப்புக்கள்.

1994-06-28 அன்று இறைபதமடைந்த எமதருமை மகளின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல்கள், அனுதாபங்கள் தெரிவித்ததோடு, எமது துன்பத்தில் பங்கு கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

— திரு: திருமதி சண்முகநாதன்.

"மலர் வாசம்",
டச் வீதி,
உடுவில் மேற்கு.

[32085]

---

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் முத்துக்குமாரு ஸ்ரீகுமார்

(ராசாண்ணை)

அன்னையின் மடியில்: **29-07-1946**
அறியாயப் பிடியில்: **27-07-1983**

வெலிக்கடை சிறையில் செந்நீர் சிந்தி,
நீ மண்ணில் உதிர்ந்து
நாம் கண்ணீர்க் கடலிலே மிதந்த நாளினைக்
காலம் மாறினும் எமது உள்ளம் மறக்குமா?
பதினொரு வருடங்கள் ஆனபின்பும் – எம்
சித்தம் கலங்குதுன் பிரிவை எண்ணி!

உன் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்:
அம்மா, மாமி.

தேவாலய ஒழுங்கை,
உரும்பிராய் கிழக்கு.

(கி/8791)

---

## நன்றி நவிலல்

கொட்டடியைப் பிறப்பிடமாகவும்,
பெருமாள் கோயிலடியில் வசித்தவருமாகிய

### திருமதி தையல்நாயகி சிவஞானம்

அவர்களின்

16-07-94 அன்னாரது மரணச்சடங்கில் பங்கு பற்றி அனுதாபங்கள் தெரிவித்த உற்றார், உறவினர்க்கும், சுகவீன காலத்தில் உதவிய அயலவர், உறவினர்க்கும், போதனா வைத்தியசாலை 4ஆம் வார்ட் வைத்திய அதிகாரி, தாதிமார், ஊழியர்களுக்கும், வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினருக்கும், மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தி உதவிபுரிந்த யாழ். பல்கலைக்கழகத்தவர், மாணவர்க்கும், அந்திய கால சேவைகள் புரிந்த ஈசன்ஸ் நிறுவனத்தவர்க்கும், சகல வழிகளிலும் உதவிகள் வழங்கிய நண்பர்களுக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— குடும்பத்தினர்.

69, வைமன் வீதி,
நல்லூர்.

(கி-8648)

---

## பரிசாதகர் தேவை

யாழ். வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோயில்) தேவஸ்தானத்திற்கு பரிசாதகர் (மடப்பள்ளி ஐயர்) தேவை. தகுதி உடையவர் நற்சான்றுகளுடன் விண்ணப்பிக்கவும். மேலதிக விபரங்களுக்கு தேவஸ்தானத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,
தர்மகர்த்தா சபைக்காக.

[32080]

---

றெட்பானா

## கேள்வி விலை கோரல்

பின்வரும் வாகனங்கள் கேள்விப்பத்திரங்கள் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. நியாயமான விலைகள் கிடைக்கப் பெறாதவிடத்து கேள்விப் பத்திரங்கள் ரத்துச்செய்யப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் ஒரு கிழமைக்குள் பணத்தைச் செலுத்தி வாகனங்களை அகற்றுதல் வேண்டும். கேள்வி விலை கோரல் முடிவு திகதி இவ் விளம்பரம் வெளியான நாளில் இருந்து ஏழு நாட்கள்.

| | | |
|---|---|---|
| 1. | டொயாட்டோ கொறல்லா கார் | 7/2750 |
| 2. | ஒஸ்டின் கார் ஏ 50 | 1/412 |
| 3. | மொறிஸ்மைனர் 5சிதி | 5/3840 |
| 4. | ஹொண்டா சி. டீ. 125 | 87/9216 |
| 5. | ஹொண்டா சி 90 (இரு சைக்கிள்கள்) | 84/5106<br>86/262 |

வாகனங்களை அலுவலக நேரங்களில் (9-00மணி—4-00மணி) பார்வையிடலாம்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வாகனங்களுக்கான கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடவும்.

ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

திட்ட இணைப்பாளர்.
றெட்பானா - யாழ்ப்பாணம்,
15, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(32084)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 05 – 05 – 1976



உதிர்வு: 27 – 07 – 1993

### பரமலிங்கம் மணிவண்ணன்

திதி: **15 - 08 - 1994**

மண்ணிடை வாழ்ந்தது போதுமென்று
வானிடை வாழப் போனீரோ?
பதினேழு ஆண்டுகள் வாழ்ந்தது போதுமென்று மன்னவன் திருவடி காணப்போனீரோ?
என்றென்றும் எங்களுடன் நீர் வாழ்ந்திருப்பீர்
ஏனெனில் மரணத்திற்கு
நம்மைப் பிரிக்கும் சக்தி இல்லையே
உதிர்ந்து விழும் கண்ணீர்ப் பூக்களால் உம்மை இந்த
ஓராண்டு பிரிவில் அஞ்சலிக்கின்றோம்.
ஈசன் பொன்னடிக் கீழ் வாழ்வாங்கு வாழ்வீராக!

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அப்பா, அம்மா,
அக்கா, தங்கை, அம்மம்மா,
பெரியப்பாமார், பெரியம்மாமார்,
சித்தப்பாமார், சின்னம்மாமார்,
சகோதர, சகோதரிமார், நண்பர்கள்.

தந்தை: செ. க பரமலிங்கம்,
[illegible]
[illegible]
யாழ்ப்பாணம்.

[7546]

---

பரிசு 1,000/-
தீபாவளி
அன்று
குலுக்கப்படும்.
ஐந்து லேபல்
சேர்த்து அனுப்பவும்.

## ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர்

சிரசின் தனித்துவத்தைப் பேணுவதற்கு; பேன் பொடுகு வராது தடுப்பதற்கு; கேசம் வளர்ச்சி பெறுவதற்கு; கேசம் பட்டுப்போல் மிளிர்வதற்கு; கேசம் உதிர்வதைத் தடுப்பதற்கு; கோர்வை குளிர்ச்சியூட்டுவதற்குத் தேவையான மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்துத் தயாரிக்க,

சித்த வைத்திய நிபுணரும், கைதடி சுதேச வைத்திய சங்கத் தலைவருமான

Dr. K. T. S. சபாநாதன்

அவர்கள் வழங்கிய
ஆலோசனையின்படி தயாரிக்கப் பெற்றது.

### ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர்

கேட்டு வாங்கிப் பயன் பெறுங்கள்.

தயாரிப்பாளர்:

### ஸ்ரீ சச்சிதானந்த களஞ்சியம்,

ஆசிரம அருகாமை, கைதடி.

[சி-8645]

---

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## நூற்றிருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழா

### பழைய மாணவர் சங்கம்

மேற்படி விழா 28-07-94 வியாழனன்று பி. ப. 2-00மணிக்கு எமது கல்லூரி அரங்கில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் கலந்து சிறப்பளிக்குமாறு எமது கல்லூரியில் பயின்ற பழைய மாணவிகள், கற்பித்த, கற்பிக்கின்ற ஆசிரியர்கள் வழி நடத்திய நடத்துகின்ற அதிபர்கள் பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் இன்னும் கல்லூரியோடு பற்றும், பிணைப்புள்ளவர்கள் யாவரையும் மிகப் பணிவன்போடு அழைக்கின்றோம்.

வருக! வருக!! வருக!!!

பழைய மாணவர் சங்கம்.
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

(32095)

---

ஊரெழு

## ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் நவோத்ர சகஸ்ர மகா சங்காபிஷேக விஞ்ஞாபனம்

28 – 07 – 1994 வியாழன் காலை 10மணிக்கு நடைபெறும்

இன்று 27 – 07 – 1994 புதன் கிழமை மாலை 3மணி முதல்

பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகும்
"வேதாகம மாமணி, சிவபூஜாநிதி"
ஊரெழு சிவஸ்ரீ
ப. ல. வைத்திய நாதசிவ ச்சார்யார்
தலைமையில் நடைபெறும்.
அருளுரை; அருள் மொழி இசையரசு
கந்தர்மடம் பிரம்மஸ்ரீ
சிவ. வை நித்தியானந்தசர்மா

- மேற்படி உபயகாரர்.

அனைவரும் வருக! இறையருள் பெறுக!!

[32097]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 19 – 08 – 1919



அம்பாள் அடியில்: 07 – 08 – 1993

### திருமதி இலெட்சுமி கார்த்திகேசு

(நயினாதீவு)

திதி: 27 - 07 - 1994

பத்துமாதம் சுமந்து எமையீன்று
பாசமுடன் எமை வளர்த்து
மகிழ்வுடனே இருந்த
விண்ணுலகம் சென்றீரோ –அம்மா
எமைப்பிரிந்து ஓராண்டு ஆனாலும்
ஆறாது எம்துயர்.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

2ஆம் வட்டாரம்.
நயினாதீவு.

(32098)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## மீண்டும் மீண்டும் மீறல்கள்!

மண்டைதீவு முகாமில் உள்ள படையினர், கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடத்திய எறிகணைத் தாக்குதலின்போது —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புப் பிரதேசமான யாழ். ஆஸ்பத்திரி மீதும் இலக்கு வைக்கப்பட்டது.

சத்திரசிகிச்சைப் பிரிவின் அறை ஒன்றின் கூரையைப் பிய்த்துக்கொண்டு விழுந்த எறிகணை, நிராந்தி ஒன்றில் தட்டுப்பட்டதால், சரிவாகச் சென்று முதலாவது சுவரைத் துளைத்து, அதனூடாக அடுத்த சுவருக்குள் புதைந்திருக்கிறது!

கூரையில் விழுந்த வேகத்துடன் அது தரையில் மோதி வெடித்திருப்பின், குறிப்பிட்ட அறைக்கு அருகில் இருக்கும் வார்ட்டில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களில் பலர் பாதிக்கப்பட்டிருப்பர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பாதுகாப்புப் பொறுப்பை செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு ஏற்றுக்கொண்ட பின்னர், இதற்கு முன்னரும் யாழ். ஆஸ்பத்திரிக்குள் எறிகணை ஒன்று விழுந்தது நினைவில் கொள்ளத்தக்கதாகும்;

குண்டு வீச்சு விமானம் ஒன்று, ஆஸ்பத்திரிக்கு முன்பாக, பாதுகாப்புப் பிரதேசத்திற்குள் கடும் தாக்குதல் நடத்தியபோதும், ஆஸ்பத்திரிக் கட்டடங்கள் சேதமுற்றதையும் மறந்து விடுவதற்கில்லை;

யாழ். ஆஸ்பத்திரி மீது அரச படையினர் மேற்கொண்ட தாக்குதல்கள், அதற்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து செஞ்சிலுவைச் சங்கம் அரசிடம் முறையிட்ட போதெல்லாம், இனிமேல் அவ்வாறு நடைபெறமாட்டாது என்றவாறே அந்தப் பக்கத்தின் பதில்கள் அமைந்தன.

ஆனால் அரச தரப்பின் பதில்கள், அதனாலேயே கௌரவிக்கப்படவில்லை; பேணப்படவில்லை; உரியவாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆஸ்பத்திரியை இயங்கச் செய்வதற்காக அரசாங்கம் செஞ்சிலுவைச் சங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை (வேண்டுமானால் ஏற்பாடு என்றும் சொல்லலாம்) அரசாங்கம் அடிக்கடி, தான் நினைத்த போதெல்லாம் மீறிவருகிறது.

தமிழர்களைக் கொல்வது என்று வரும்போது, தானே செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீறுவதற்கு ஸ்ரீலங்கா அரசும் அதன் படைகளும் ஒரு போதும் பின்னுக்கு நிற்பதில்லை.

யுத்த வேளைகளில் மனிதநேயப் பணிபுரிவதை இலட்சியமாகக் கொண்டு, அந்த நோக்கத்தை உரிய முறைப்படி நிறைவேற்றி அனைத்துலகத்திலும் மதிப்புப் பெற்றது செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு. அத்தகைய அமைப்புடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அரசு மீறுவது இது முதற்தடவையல்ல.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு சேந்தாங்குளம் — இலவாலை விதிப் பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாக்குவதற்கு அரசு இணங்கி, செஞ்சிலுவைச் சங்கத்துடன் ஒப்பந்தம் செய்தது. ஆனால் அந்த ஒப்பந்தத்தை மீறிய இராணுவம், பாதுகாப்பு வலயப் பகுதியூடாக வந்தே அந்தப் பகுதியையும், மாதகல் பகுதியையும் கைப்பற்றியது!

எனவே அரசபடைகள் — அரச — ஒப்பந்தங்களை மீறும்போது, வெறுமனே ஆட்சேபம் தெரிவிப்பதாலோ அல்லது முறைப்பாடு செய்வதாலோ எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை.

செஞ்சிலுவைச் சங்கம் அரசுக்கு அழுத்தம் போடும் விதத்தில் சற்றுக் கண்டிப்புடன் நடந்து கொள்ள வேண்டும். அத்தோடு ஸ்ரீலங்கா அரசின் இந்த நடத்தைகெட்ட தனத்தை உலகத்துக்குப் பிரசித்தப்படுத்தி, அதன் உண்மையான உருவத்தைக் காண்பிக்க வேண்டும். தமிழர்களை — அப்பாவிகளை — அரச கொன்றொழிப்பதை இது மறைந்து வருவதை அம்பலப்படுத்த வேண்டும்.

---

வடக்கில் இருந்து

# இடம் பெயர்ந்தோரில் 19,000 பேர் மட்டுமே வாக்களிக்க விண்ணப்பம்

கொழும்பு, ஜூலை 27

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வாக்களிக்க அனுமதி கோரி 19 ஆயிரம் இடம் பெயர்ந்தவர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்திருக்கிறார்.

சண்டே ஒப்சேர்வருக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இடம்பெயர்ந்தவர்கள் வாக்களிக்க அனுமதிகோரி விண்ணப்பிப்பதற்கான கடைசித் திகதி முடிவடைந்துவிட்டது.

அனுமதிகோரி விண்ணப்பித்துள்ள 19 ஆயிரம் இடம் பெயர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் தற்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

பரிசீலனை செய்யப்படுவது முடிந்ததும் இடம்பெயர்ந்தவர்கள் தற்போது அவர்கள் தங்கியிருக்கும் இடங்களில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.

கேள்வி: வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள வாக்காளர்கள் இத்தேர்தலில் எப்படி வாக்களிக்க முடியும்?

ஆணையாளர்: அதற்கு நான் உதவ முடியாது. மக்களுக்கு உரிமையுண்டு. வாக்களிக்கும் அந்த உரிமையை அவர்கள் பயன்படுத்தவேண்டும். இப்பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்; மக்கள் முன் முயற்சி எடுத்து வாக்களிக்கச் செல்ல வேண்டும். இப்பகுதிகளில் பாதுகாப்பும் வழங்கப்படும். ஆகவே வாக்காளர்கள் வாக்களிக்க முடியும். (இ-எ)

## முதன்மை ஆசிரியர் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் — 1ஐ சேர்ந்த முதன்மை ஆசிரியருக்கான விசேட கூட்டம் நாளை வியாழன் காலை 9.00 மணிக்கு கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

## புலிகளின் குரல் வானொலியில்

27 – 07 – 1994

புதன் இரவு

★ 8-01 — குயிலோசை "களத்தில் காத்தான் சிந்து நடைக் கூத்து அங்கம் - 03
★ 8-20 — ஏர்முனை — பருப்புப் பயிர்களில் பூச்சி நோய்த் தாக்கம் கேள்வி பதில்
★ 8-30 – செய்திகள்
★ 8-40 — லெப்டினன்ட் கேணல் சரா நினைவாக சிறப்பு நிகழ்ச்சி. "விடுதலையின் தேன்வியிலே சரித்திரம் படைத்தவர்கள்"

28 – 07 – 1994

வியாழன் காலை

★ 7-02 – மாவீர வணக்கம்
★ 7-15 — விடுதலை கீதங்கள்
★ 7-30 – செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## 6,000 யாழ். முஸ்லிம்கள் புத்தளத்தில் வாக்களிப்பர்

கொழும்பு, ஜூலை 27

வடக்குக்கு வெளியே இடம்பெயர்ந்தோரில் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்த 19 ஆயிரம் பேரில் 6 ஆயிரம் பேர் புத்தளத்தில் தங்கி உள்ள யாழ். முஸ்லிம்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின் வாக்குகளை நம்பியே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாழ். மாவட்டத்தில் வேட்பாளர் பட்டியலைத் தாக்கல் செய்தது குறிப்பிடத்தக்கது.

இடம்பெயர்ந்தோர் வாக்களிப்பதற்கு வசதியாக இவர்கள் தற்போது தங்கியிருக்கும் இடங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட ஒரு வார காலத்துக்குள் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை இடம்பெயர்ந்தோர் அனுப்பி வைக்க வேண்டும்.

எனினும் தேர்தல் ஆணையாளர் இந்த திகதியை மேலும் ஒரு வார காலத்துக்கு நீடித்திருந்தார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இடம்பெயர்ந்துள்ளபோதிலும் யாழ் மாவட்ட வாக்காளர் இடாப்புகளில் பெரும்பகுதி சிங்களத்திலேயே தயாரிக்கப்பட்டிருந்ததால், வாக்காளர்களை இனங்கண்டு உரிய இலக்கத்தைக் கண்டறிந்து விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியாது போய்விட்டது என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

தமிழ் மொழியிலான வாக்காளர் இடாப்புகள் உரிய நேரத்தில் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த யாழ். மாவட்ட வாக்காளர்கள் பலர் தமது உறவினர்களின் வீடுகளில் தங்கி உள்ளனர் என்றும்—

இதனால் அவர்கள் வாக்களிக்க விண்ணப்பிப்பதற்கு அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

வாக்காளர் இடாப்புகள் சிங்களத்தில் மட்டும் இருந்தால் புத்தளத்தில் தங்கி உள்ள முஸ்லிம் வாக்காளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகரும் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமான டாக்டர் இலியாஸ் தெரிவித்துள்ளார்.

வாக்களிக்கத் தகுதியான முஸ்லிம்கள் அனைவரும் விண்ணப்பிக்கத் தவறியதற்கு இதுவே காரணம் என்றும் அவர் கூறினார். (இ)

## கடற்படைக்கு மற்றொரு தரையிறங்கு கப்பல்!

யாழ்ப்பாணம், ஜூலை 27

ஸ்ரீலங்கா கடற்படைக்கு நான்காவதாக தரையிறங்கு கப்பல் ஒன்று ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சினால் கையளிக்கப்பட்டுள்ளது.

'ரணவிஜய' என்ற இந்தத் தரையிறங்கு கப்பல் கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தினால் சுமார் 13 கோடி ரூபா செலவில் கட்டப்பட்டது.

ஸ்ரீலங்கா கடற்படையிடம் முன்னர் கையளிக்கப்பட்ட மூன்று தரையிறங்குக் கப்பல்களில் 'ஹெந்தல' என்ற கப்பல் 1992 ஆம் ஆண்டு சப்பிட்டி கடலில் மூழ்கிச் சேதமானது.

இக்கப்பல் மீட்டெடுக்கப்பட்ட போது அது மீளப்பயன்படுத்த முடியாத அளவு சேதமடைந்துள்ளதால் அது ஏலத்தில் விற்கப்படவிருக்கிறது.

தற்சமயம் கடற்படையிடம் 1991 இல் கட்டப்பட்ட 'ரணசுரு', 'பப்பதா' ஆகிய தரையிறங்குக் கப்பல்கள் உள்ளன. (உ-3)

## பாடசாலைகளில்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது இவ்விழாவில் இக்கல்லூரியின் பழைய மாணவரான பேராசிரியர் அதிவண கலாநிதி எஸ். ஜெயநேசனும் பாரியாரும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (க-1631)

★ ★ ★

நாயன்மார்கட்டு சிவபரன் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு திரு. கா. இரகுநாதன் தலைமையில் நடைபெறும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அலுவலர் திரு. கி. ஸ்ரீஜெயநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க)

★ ★ ★

கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்துடன் இணைந்து சர்வோதயத்தின் ஆதரவுடன் இயங்கும் ஞானசூரியன் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய அதிபர் திரு. அ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்;

தென்மராட்சி கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. கணேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ட)

## செல்லச்சாமியை சேர்த்தது சிறிமாவுக்கு ஆத்திரமாம்

கொழும்பு, ஜூலை 27

இ.தொ.கா.வில் இருந்து நீக்கப்பட்டவரும் முன்னாள் இ.தே.க. அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமியை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் சேர்த்துக் கொண்டது முன்னணியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னணியின் பிரதித் தலைவி சந்திரிகாவை இதற்காக அவர் கடிந்து கொண்டார் என்றும் 'சண்டே ஒப்சேர்வர்' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது

செல்லச்சாமி வேட்பாளராக நியமிக்கப்பட்ட துசிறிமாவோ சிங்கப்பூரில் இருந்து திரும்பும் வரை அவருக்கு தெரியாது இருந்ததாக, முன்னணியின் வட்டாரங்களை ஆதாரங்காட்டி இப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. (இ-எ)

## பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் கொழும்பில் இருந்து அறிவித்துள்ளார்.

பொதுக் கலை தகைமைத் தேர்வு (ஜி. ஏ. கியூ) டிசம்பர் மாதம் நடைபெறும் என்றும் —

பொது விஞ்ஞான தகைமைத் தேர்வு (ஜி. எஸ். கியூ) பிற்போடப்பட்டுள்ளதாகவும் — அரச அதிபர் அறிவித்துள்ளார். (உ-3)

## ஆலயங்களில்

புலோலி சாரையடியில் எழுந்தருளியிருக்கும் புனித ஆரோக்கிய அன்னை திருநாள் வருகிற 31 ஆம் திகதி ஞாயிறு அன்று கொண்டாடப்படும். 28 ஆம் திகதி கொடியேற்றமும் 30ஆம் திகதி சனிக்கிழமை மாலை நற்கருணை விழாவும் நடைபெறும். திருநாள் [illegible] திருச்சொரூப பவனியும் [illegible] வாதமும் இடம்பெறும். (க)

---

ராணுவ நடவடிக்கையை அவதானிக்க

## ஹெய்ட்டிக்கு ஐ. நா. பார்வையாளர் குழு

வாஷிங்டன், ஜூலை 27

ஹெய்ட்டியில் ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதை அவதானிப்பதற்கென ஐ.நா. சபை தனது பார்வையாளர்களை நியமிக்க வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுக் கொண்டிருக்கிறது.

இராணுவ நடவடிக்கை முடிவடைந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியதும் ஆறாயிரம் பேரைக் கொண்ட அமைதிகாக்கும் படையை ஐ.நா. சபை நிறுவ வேண்டும் என்றும் அது யோசனை தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமான தீர்மானம் வெள்ளிக்கிழமை அங்கீகரிக்கப்படும் என நாம் நம்புவதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹெய்ட்டியில் சட்டபூர்வமான அதிகாரிகளை மீண்டும் நிலை நாட்டுவதற்கு உதவக்கூடிய வகையில் அமெரிக்காவின் தலைமையிலான பல்தேசியப்படைக்கு ஆதரவு வழங்குமாறு ஐ.நா. சபையை இந்தத் தீர்மானம் கேட்டுக் கொள்ளும். (க)

## தபால்களை சேர்க்கக் கோரிக்கை

நாளை வியாழக்கிழமை பருத்தித்துறைக்கு வந்து திரும்பும் 'பிளாம் பயான்' கப்பலில் தபால் பொதிகளை எடுத்துச் செல்லுவதற்கு ஏதுவாக நாளை காலை 9 மணிக்கு முன்னதாக வெளியூர் தபால்களை யாழ் பிரதம தபாலகத்திலுள்ள இருக்கும் தபால் பெட்டியில் சேர்க்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொஸ்னியாவுக்கு சர்வதேச நாடுகளின் தாக்குதல் படை

### ஐ. நா. படைகளை வாபஸ்பெற யோசனை

நியூயோர்க் ஜூலை 27

பொஸ்னியாவில் இருந்து ஐ.நா. அமைதிப் படை வாபஸ்பெறப்பட்டு சர்வதேச நாடுகளைச் சேர்ந்த தாக்குதல் படைப்பிரிவு ஒன்று அனுப்பி வைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொஸ்னியாவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட ஐ. நா. ஏற்பாட்டிலான தீர்வுத் திட்டத்தை சேர்பியர்கள் நிராகரித்துள்ளதால் பொஸ்னியாவிலும் குரோஷியாவிலும் இருந்து ஐ.நா. படைகளை வாபஸ் பெறக் கோரப்போவதாக ஐ.நா. பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி தெரிவித்துள்ளார்.

பொஸ்னியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா, ஜேர்மனி ஆகிய நாடுகள் இணைந்து தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயாரித்திருந்தன.

இதனையே பொஸ்னிய சேர்பியர்கள் ஏற்க மறுத்துவிட்டனர்.

கடந்த 27 வருட காலமாக யுத்தம் நடைபெற்றுவரும் பொஸ்னியாவில் சமாதானம் ஏற்படுத்துவதற்கு இறுதித் தீர்வாக இந்தத் தீர்வுத் திட்டத்தை ஐ.நா. கருதியது.

பொஸ்னியாவில் சேர்பியர்களுக்கும் முஸ்லிம் அரச படைகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் சண்டைகளில் இதுவரை இரண்டு லட்சம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் 10 லட்சம் பேர் இடம்பெயர்ந்தனர்.

பொஸ்னியாவில் உள்ள ஐ.நா. சமாதானப் படைகளில் கூடுதலானோர் பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்தவர்கள் (இ)

## விஜேவீராவை காட்டிக் கொடுத்தவர் யார்?

ஜே.வி.பி. தலைவர் ரோஹண விஜேவீராவைக் காட்டிக் கொடுத்தவர், இந்த இயக்கத்தின் அரசியல் குழுவில் விஜேவீராவுக்கு அடுத்த நிலையில் இருந்த ஒருவரே என்றும் —

அந்த நபர் இன்னும் உயிருடன் அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ளார் என்றும் — லண்டனில் உள்ள ஜே.வி.பி. சர்வதேச நடவடிக்கைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கையில் தலைமறைவாக இருக்கும் ஜே.வி.பி. தலைவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழுவின் சார்பில் கி. ஐ. பெர்னாண்டோ, சனக குலதிலக ஆகியோர் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

ஜே.வி.பி அரசியல் குழு உறுப்பினர் டி. எம். ஆனந்தவினால் ரோஹண விஜேவீரா காட்டிக் கொடுக்கப்பட்டார் என்பது தவறு.

விஜேவீராவைக் கைது செய்வதற்கு ஒரு மாதத்துக்கு முன்னரே அவர் ஒளித்திருந்த இடம் அரசுக்குத் தெரிந்திருந்தது.

அரசு உடனடியாகச் செயல்படாமல் இயக்கத்தின் ஏனைய முக்கியஸ்தர்கள் ஒளித்திருந்த இடங்களையும் அறிந்து கொள்வதில் அந்த ஒரு மாத காலத்தைப் பயன்படுத்தியது.

ஜே.வி.பி. தலைவர்களை ஒரேயடியாக கண்டோடு கைது செய்வதே அரசின் தந்திரோபாயத்திட்டமாக இருந்தது

விஜேவீரா கொல்லப்பட்ட நவம்பர் 12ஆம் திகதிக்கு ஒரு மாதத்துக்கு முன்பு, அவரைக் காட்டிக் கொடுத்த நபரை பொலிஸார் கைது செய்தனர். அந்த நபரின் குடும்பம் தலையிட்டதனால் அந்த நபர் கொல்லப்படாமல் இன்னும் உயிருடனிருக்கிறார்.

அதற்கு பரிசாக அவர் தனது தலைவர் மற்றும் கூட்டாளிகளைக் காட்டிக் கொடுத்தார்;

இதனை மூடிமறைக்க, விஜேவீரா கொல்லப்படுவதற்கு சில தினங்கள் முன்னதாகக் கைது செய்யப்பட்ட டி. எம். ஆனந்தாவை அரசு பயன்படுத்தியது

விஜேவீராவை அடையாளங் காட்டுவதற்காக அவர் தங்கியிருந்த தோட்டத்திற்கு சித்திரவதைக்குள்ளான ஆனந்தாவை பொலிஸார் இழுத்துச் சென்றனர். இது உண்மையாகக் காட்டிக் கொடுத்தவரை மூடிமறைப்பதற்காக செய்யப்பட்ட செயலாகும்.

உண்மையாகக் காட்டிக் கொடுத்த நபர் விஜேவீரா கொல்லப்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்பதாக எப்படி நாட்டை விட்டு வெளியேற முடிந்தது என்பது பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இப்படி அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாஹோவில் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

கொழும்பில் இருந்து பருத்தித்துறைக்கு மண்ணெண்ணெயை ஏற்றிவரும் பணியில் ஈடுபட்டுள்ள 'மாஹோ' கப்பலில் மா, சீனி, சவர்க்காரம் போன்ற அத்தியாவசியப் பொருள்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் மேற்கண்ட தகவலை கொழும்பில் இருந்து அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்துக்கு அவசரமாகத் தேவைப்படும் பொருள்களை அனுப்பவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## கிளிநொச்சியில் பெண் தீயினால் காயம்

உயரத்தில் எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கு தட்டுண்டு கீழே படுத்திருந்தவர் மீது விழுந்து தீப்பிடித்தது இதனால் படுத்திருந்த பெண் உடல் முழுவதும் எரிந்து படுகாயமடைந்தார்.

கிளிநொச்சி புதுமுறிப்பு என்ற இடத்தில் திங்கள் இரவு இச்சம்பவம் இடம் பெற்றது

காளிமுத்து மகேஸ்வரி (வயது 40) என்ற குடும்பப் பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

## பிரபா போன்ற தலைவர் தென்னிலங்கையில் கிடையாது

### 'சண்டே ஐலண்ட்' அரசியல் கண்ணோட்டம்

கொழும்பு, ஜூலை 27

இன்று அரசாங்கத்திலோ அல்லது எதிரணியிலோ விடுதலைப் புலிகள் தலைவர் திரு பிரபாகரன் போன்ற பலமான தலைவர் கிடையாது. குறைந்தது யுத்தத்தை முன்னெடுத்து நடத்தக்கூடிய தலைவராவது அரசிலோ எதிரணியிலோ கிடையாது.

'சண்டே ஐலண்ட்' வார இதழில் 'அகனி' என்பவர் எழுதி அரசியல் கண்ணோட்டத்தில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"வெற்றிக்கு முன்முயற்சி, தந்திரோபாயம், சாதாரத் தலைமைத்துவம்" என்ற தலைப்பில் இக்கண்ணோட்டம் எழுதப்பட்டுள்ளது.

பிரபாகரனுக்கு இணையாக இருக்கக்கூடியவராக முன்னாள் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா இருந்தார். தனது பணியில் உச்சத்தில் இருந்தபோது விடுதலைப் புலிகளினால் அவர் கொல்லப்பட்டார்.

வடக்கு - கிழக்கு யுத்தம் நிற்கும் தீர்வு காணுவதற்கு பெரிய முட்டுக்கட்டையாக இருப்பது தென்பகுதியில் பலமான அறிவு நிறைந்த அரசியல் தலைமை இல்லாததே யாகும் என்றும் அக்கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-எ)

## இராணுவத்துக்கு புதிதாக 5,000 பேர்

கொழும்பு, ஜூலை 27

இராணுவத்திற்குப் புதிதாக ஐயாயிரம் சிப்பாய்கள் திரட்டப்படவுள்ளனர்.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆகஸ்ட் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

18-24 வயதுக்குட்பட்ட எட்டாம் வகுப்புச் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பனாகொட, அநுராதபுரம், கண்டி, குருணாகல், காலி, மாத்தறை, மின்னேரியா, தியத்தலாவ, அம்பாறை, இரத்தினபுரி' கேகாலை மற்றும் மாத்தளை ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களில் நேர்முகப்பரீட்சை நடைபெறும் தினங்களில் ஆட்சேர்ப்பும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (இ-எ)

**மரங்கள் மண்ணாய்ப் போகலாம்- ஆனால் மண் மரங்களாக முடியாது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 26 – 10 – 1953

மறைவு: 27 – 07 – 1990

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 3 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் நடராஜா செல்வரெட்னம்

எங்கள் நினைவில் நிலைத்திருக்கும்
உங்கள் முகம் என்றென்றும் எங்கள்
உள்ளங்களில் பதிந்திருக்கும் உங்கள்
நினைவே எங்கள் இதயங்களில் நிறைந்திருக்கும்

உங்கள் பிரிவு தாங்காது துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

## 4 ஆம் மாத நினைவஞ்சலி



தோற்றம்: 25 – 06 – 1931

மறைவு: 25 – 03 – 1994

### அமரர் கந்தையா கணபதிப்பிள்ளை

(புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம்)

அன்பிலும் பண்பிலும் எம்மை வாழ வைத்த
எங்கள் அன்புத் தந்தையே எம்மை விட்டு
நீங்கி நான்கு மாதங்கள் மறைந்தாலும்
உங்கள் நினைவுடன் வாழ்கின்றோம்,

அன்பு மகள்,
பேரப்பிள்ளைகள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (32102)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 27

கடந்த 23 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மறைந்திருந்து தாக்கியதில் விடுதலைப்புலிகள் இயக்க போராளியான லெப்டினன்ட் தாமரன் (வடிவேல் பாக்கிய செல்வம் — மட்டக்களப்பு) வீரச்சாவடைந்தார். (உ-3)

## தமிழர்களுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

வெளியில் நடக்கும் பேச்சுவார்த்தைகளை அடிப்படையாக வைத்து மட்டும் தீர்வு எதனையும் உருவாக்குவதை எனது கட்சி ஒருபோதும் அனுமதிக்காது — என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை —

நீடித்துவரும் தமிழர் உரிமைப் போராட்டத்தை நிரந்தரமாக தீர்ப்பது தொடர்பான கொள்கையளவில் எவ்வித நடவடிக்கை பற்றியும் ஐ. தே. கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்படவில்லை — என்று பி.பி.ஸி சுட்டிக்காட்டியது.

வடக்கு - கிழக்கு இணைப்பை ஆதரிப்பதில்லை என்ற கொள்கையை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கவே ஐ. தே. கட்சி விரும்புகிறது; தமிழர் தாயகக் கோட்பாட்டை நிராகரிக்கும் வகையிலேயே அது சகுந்தகக் கணிப்பை வலியுறுத்துவதாகவும் அவதானிகள் தெரிவித்தனர்.

## பொ. ஐ. மு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சி, லங்கா சம சமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மகாஜனக் கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு), ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சமிகம் ஆகியவற்றின் பொதுச் செயலாளர்கள் இக்கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

## கிழக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் 40 பக்க தேர்தல் விஞ்ஞாபனத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடக்கு பகுதியை மீட்டெடுப்பது குறித்தோ, இனப்பிரச்சினை குறித்தோ தெளிவான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டம் எதுவும் வெளியிடப்படவில்லை என்று தேர்தல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாகாண சபையின் எதிர்காலம் பற்றிவும் விஞ்ஞாபனத்தில் எதுவும் கூறப்படவில்லை.

அரசமைப்பு தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கியதாக நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடரும் என்றும் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏனைய அம்சங்களாவன:

★ உணவு முத்திரைத் திட்டம் விஸ்தரிக்கப்படும். மாதம் ஆயிரத்து 500 ரூபாவுக்குக் குறைவான வருமானம் பெறுபவர்களுக்கும் உணவு முத்திரை வழங்கப்படும். இப்போது மாதம் 750 ரூபா வருமானம் பெறுபவர்களுக்கே உணவு முத்திரை வழங்கப்படுகின்றது.

★ மகாபொல புலமைப் பரிசில் ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து 2 ஆயிரம் ரூபா ஆக அதிகரிக்கப்படும்.

★ நாடாளுமன்றத்தில் 18 - 35 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கென ஒரு தொகை ஆசனங்கள் ஒதுக்கப்படும்.

★ சபாநாயகரின் அனுமதி பெறாமல் எம். பிக்கள் மீதான லஞ்சக் குற்றங்களை விசாரிக்க சட்டம் கொண்டு வரப்படும்.

★ நாடாளுமன்றத்துக்கு மட்டுமே பதில் அளிக்கக்கூடிய அதிகாரம் கொண்ட லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். அவரை நாடாளுமன்றமே பதவி நீக்கஞ் செய்ய முடியும்.

★ தேர்தலுக்கு முன்பதாக, வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்புக்கான பயிற்சி அளிக்கப்படும்.

★ யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இராணுவ வீரர்களுக்கு விவசாய நிலம் வழங்கப்படும். (இ-எ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்- ஜூலை 27

வலிகாமம் மேற்கு உதைபந்தாட்டச் சங்கத்தினரால் நடத்தப்படும் வலிமேற்கு வலய கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று புதன்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற இருக்கின்றன.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பி. ப. 3 மணி — இணுவில் இந்து அணி எதிர் கிறாஸ்கொப்பர்ஸ் அணி.

★ பி. ப. 4 மணி—அராலி எ. எஸ். அணி எதிர் கலைவாணி அணி.

★ பி. ப. 5 மணி —சென் தோமஸ் வி. க. அணி எதிர் விநாயகர் ஐக்கிய அணி. (இ-3-20)

★ ★ ★

சித்தம்பலம் விளையாட்டுக் கழகம் தனது இரண்டாம் ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தி வந்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் இன்று மாலை 7 மணிக்கு மின்னொளியில் கழக மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

இன்றையபோட்டியில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ ஐங்கரன் வி. க. அணி எதிர் ஸ்ரீ விக்னேஸ்வரா அணி.

★ ஆவரங்கால் மத்திய வி. க. அணி எதிர் அரியாலை ஐக்கிய வி. க. அணி. (இ-3-20)

## நாளை

நல்லூர் உற்சவகாலத்தில் பங்குபற்றும் செஞ்ஜோன் அம்புலன்ஸ் தனியார் பிரிவு மற்றும் வாடசாலைகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள், உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் யாழ். மத்திய கல்லூரியில் நாளைமாலை 4மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வைகை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் ஜூலை 27

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் வை. க. தவமணிதாசன் எழுதிய ''வைகை'' கவிதை நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. க. சி. குகதாசன் தலைமையில் நடைபெறும். (க)

## கைமணிக்கூடு தவறிவிட்டது

23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியளவில் எனது கைமணிக்கூடு [சிற்றிசன்] அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோவிலுக்கும் — அச்சுவேலி மகா வித்தியாலயத்திற்கும் இடையில் வீதியில் கைதவறிவிழுந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

திருமதி பேபி துரைசிங்கம்,
மகா வித்தியாலயம் "ஆசிரியை"
அச்சுவேலி. (32100)

## கங்கா என்ரபிறைஸ்

ஆதரவில்

## யாழ். விளையாட்டுக் கழகம்

நடத்தும்

## மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி 6பேர் 6ஓவர்

அனுமதிக்கட்டணம்: ரூபா 60/-
விண்ணப்ப முடிவு திகதி: 08 – 08 – 1994
தொடர்பு:

69B மணிக்கூட்டு வீதி.
(சன்மார்க்க மகா வித்தியாலய முன்பாக)
யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு:
ஜெகன் போட்டோ
399, மணிக்கூட்டு வீதி.

[32099]

## மரண அறிவித்தல்கள்

### கௌரிதாஸ் செல்வமலர் (மலர்)

அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 31/5, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய கௌரிதாஸ் செல்வமலர் அவர்கள் 25.7.94 அன்று அகால மரணமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற செல்லத்துரை வள்ளியம்மா அவர்களின் புதல்வியும், கௌரிதாஸின் மனைவியும், விசாலாட்சியின் மருமகளும், காலஞ்சென்ற மாலி ஆசாரி, பார்வதியின் பேர்த்தியும், சரியத்தி (யா. இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), தர்மறேஜினி (யா. சென் ஜோன்ஸ் பாலர் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஜெயராணி, திருமதி சிறிதரன், பத்மாவதி (புஸ்பா), கணேசமூர்த்தி (யாழ்), மகேஸ்வரன் (விசுவமடு), திருமதி, செல்வராசா, வசந்தகுமாரி (விசுவமடு), இராமதாஸ் (பருத்தித்துறை) காலஞ்சென்ற பாஸ்கரன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.7.94) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கௌரிதாஸ்
(கணவன்)

31/5, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். [32104]

### திருமதி தியாகராசா சிவரெட்னம்

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி தியாகராசா சிவரெட்னம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தியாகராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலரெட்னம், திருமதி தம்பு - செல்லம்மா, கதிரேசு, திருமதி பரமானந்தம் - யோகம்மா, காலஞ்சென்ற பேரம்பலம், திருமதி தியாகராசா - மீனாட்சி, கௌரிநாயகி (மீனாட்சி), குகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-7-94) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கொக்குவில் இல. 151, பிரம்படி ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. கதிரேசு
[சகோதரன்]

151, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில். [32105]

### கனகசிங்கம் பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர் - பொலிஸ் தலைமைக் காரியாலயம்)

கதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் (இந்திர வாசா) கொண்ட காலஞ்சென்ற திரு. திருமதி கனகசிங்கம் (ஓவசியர்) தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் பாலசுப்பிரமணியம் 21-7-94 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும், செந்தில்குமார் (பொறியியலாளர் - அமெரிக்கா), Dr நந்தகுமார் (கொழும்பு போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் (ஓவசியர்) அன்புச் சகோதரரும் கொக்குவில் மேற்கு திரு. திருமதி T. கந்தையா அவர்களின் அன்பு மருமகனும் Dr. சாந்தி (அமெரிக்கா), பிறாகினி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-
கு. கணேசதாசன்
(சகோதரன்)
பாடசாலை அருகில்,
சுதுமலை வடக்கு.

35, புகையிரத நிலைய வீதி,
கல்கிசை, கொழும்பு. (7551)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தர்மலிங்கம் ஞானாம்பிகை

உடுப்பிட்டி இமையாணன் சந்தை வீதியைச் சேர்ந்த தர்மலிங்கம் ஞானாம்பிகை 26-07-94 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குணரத்தினம் தர்மராசா, பவளகாந்த ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவலிங்கம் கமலாம்பிகையின் சகோதரியும், அபூர்வசிங்கம் (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்), கிருஷ்ணவேணி ஆகியோரின் அன்பு மாமியாரும் முரளிதரன், சசிகலா, அனுஷ்காந்த் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை (27-07-1994) பிற்பகல் 2 மணியளவில் வல்லை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர்கள் அனைவரும் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்:
அபூர்வசிங்கம்
(மருமகன்)

சந்தை வீதி,
இமையாணன்,
உடுப்பிட்டி. [32107]

### திருமதி கதிரவேலு நாகரத்தினம்

தாவடி வடக்கு, அரசடி லேனைச் சேர்ந்த திருமதி கதிரவேலு நாகரத்தினம் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற க. கதிரவேலுவின் அன்பு மனைவியும், கே. கே. இராசரத்தினம் (உரிமையாளர், கே. கே இராசரத்தினம் நகை மாளிகை), திருமதி அ. ராசேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், ஐ. அருள்நந்தி (உரிமையாளர், அருள் வர்த்தக நிலையம், திருநெல்வேலி), திருமதி இ. சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், கானப்பிரியா, சிந்துஜா, சிரிசுதா, செந்தூரன், கரிகரன், சியாமளரூபன், வித்தியா, லாவண்யா, தர்சிகா, சோபிகா, கோகுலரூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27 07-1994) புதன்கிழமை காலை 9மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கே. கே. இராசரத்தினம்.

தாவடி வடக்கு,
கொக்குவில். [32096]

### திருமதி றெஜினா சொர்ணம் நவரத்தினசிங்கம்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி றெஜினா சொர்ணம் நவரத்தினசிங்கம் 26-7-94 அன்று இறைபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற அதிபர் திரு எட்வேட் நவரத்தினசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி மனுவல் சிங்கராயர், Dr N. A. C. மோகன்ராஜ் (U.S.A.) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. J சிங்கராயர், திருமதி சித்தா மோகன்ராஜின் அன்பு மாமியாரும், Dr திருமதி நிமோ நிக்கலஸ் (கனடா), பிரியதர்ஷன் (இந்தியா), அமிர்தி, மிதினா, சாமினி (U.S.A.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற P. M வேதநாயகம், P J அமிர்தநாயகம், அருட்திரு P J. பாக்கியநாதர் (C. R.), திருமதி சிசிலியா சிங்கராயர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி திரேசா வேதநாயகம், அருட்செல்வி மேரி ஓசிலர், திருமதி அலெக்ஸ் அமிர்தநாயகம், திருமதி மதிளீன் பயஸ், திருமதி புனோசம் மரியநாயகம் (கனடா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 109, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாண, இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் அடக்கச்சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி மனுவல் சிங்கராயர்

பண்டத்தரிப்பு. (32106)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் நாகலிங்கம்

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் நாகலிங்கம் அவர்கள் 21-07-1994 காலை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. சுப்பையா நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி விமலாதேவி அவர்களின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. க. முத்துவேற்பிள்ளை அவர்களின் மாமியாரும், நடேசன், மாலதி (நியூசிலாந்து), ஜெகதீசன் (நியூசிலாந்து), விமலேசன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-07-1994 மாலை நடைபெற்றன. உறவினர்கள், நண்பர்களுக்கு இத்தகவலை அறியத் தருகிறோம். உடன் அறிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

திருமதி வி. முத்துவேற்பிள்ளை.

[7548]

### செல்லத்துரை சற்குணராஜா

(கனடா)

உடுவில் தெற்கு யாமாச்சந்தியை பிறப்பிடமாகக் கொண்டவரும், கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லத்துரை சற்குணராஜா உடுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று காலமானார்.

இவர் செல்லத்துரை - குணலட்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வரும் சரஸ்வதியம்மாவின் (கனடா). அன்புக் கணவரும், ஐங்கரன் (கனடா), செல்வி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மகுலராஜா (பொறியியலாளர், (கனடா), நற்குணராஜா (கனடா), தர்மலோஜினி, தர்மரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் குணரத்தினம் (தேசியகட்டடாசிக் கூட்டுத்தாபனம்–வாழைச்சேனை), காலஞ்சென்ற நமசிவாயம் இராசம்மா ஆகியோரின் மருமகனும், தேவநாயகம் (R.D.O. யாழ்ப்பாணம்), சிவபாதம், சிவகுமார், வசந்தகுமாரி, சசிக்குமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
S குணரத்தினம்
(மாமனார்)

(32108)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27 - 07 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org